number of seats in the medical colleges of the State and offering assistance in this regard ; and

(b) if so, the details thereof ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) In June 1966, this Government increased the number of admissions to State Medical Colleges by 89. Subsequently, in August 1966, a copy of Government of India's communication requesting State Governments other than Madras to increase the admissions was received. None of the Medical Colleges in this State was included in the annexure to this letter which indicated the Medical Colleges in the country which would be in a position to increase the number of seats from October 1966.

The Central assistance offered was Rs. 15,000 per additional admission towards non-recurring expenditure and Rs. 2,000 per additional admission towards recurring expenditure for the year 1966–67. The assistance is being claimed for the extra 89 seats.

திரு. சா. கணேசன் : மத்திய ஆட்சியிலிருந்து அரசாங்கத்திற்கு வந்துள்ள கடிதம் நமக்கு அவ்வளவு சாதகமானதாக இல்லை என்பது அமைச்சர் அவர்கள் படித்ததில் இருந்து தெரிகிறது. பிற மாநிலங்களுக்குள்ள அளவு வாய்ப்போ அல்லது சலுகையோ நமக்கில்லாத நிலையில் அது காணப்படுகிறது. ஆகவே, அதை வளர்த்து, அதாவது நம் மாநிலத்திற்கு ஏராளமான, ஏராளமான என்று கூறும்போது எண்ணிக்கையற்ற என்ற பொருள் அல்ல. இப்போதுள்ளதை விட அதிகப்படியான மாணக்கர்களைச் சேர்த்து பயிற்சி கொடுப்பதற்கோ அல்லது புதிய கல்லூரிகள் அமைத்து அதன் மூலம் செயல்படுவதற்கோ அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை அணுகிற்று? அப்படி அணுகியிருந்தால் என்ன பலன் கிட்டிற்று?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : என் விடையிலிருந்து அதைத் தெரிந்து கொண்டிருப்பார்கள். மற்ற மாநிலங்களுக்கு கொடுத்திருக்கிற காரணத்தினால் இங்கு 89 சீட்ஸ் அதிகப்படியாக இந்த ஆண்டு நாம் ஏற்கனவே ஜூன் மாதத்தில் சேர்த்திருக்கிறோம். ஏற்கனவே 986 ஆக இருந்ததை 1,075 ஆக உயர்த்தி இந்த 89 எக்ஸ்ட்ரா அட்மிஷனுக்கு அவர்கள் கொடுக்கும் 15,000 ரூபாய் நான்-ரெக்கரிங் கிரூண்டும், ரூ. 2,000 ரெக்கரிங் கிரூண்டும் இந்த 89 மாணவர்களுக்கு கொடுக்கவேண்டுமென்று எழுதிக் கேட்டு அதில் ஓரளவு அந்தப் பணத்தை உபயோகப்படுத்தி வருகிறோம்.

Army Medical Corps

* 569 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the family allowance of Rs. 250 per mensem offered by the Government to the doctors who had joined the Army Medical Corps has not been distributed to the dependents yet ; and

9th November 1966]

(*b*) if so, the reasons therefor?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) இராணுவத்தில் சேர்ந்துள்ள தமிழ்நாடு மருத்துவப் பணி மருத்துவ அதிகாரிகளுக்குக் குடும்பப் படி வழங்க அரசாங்கம் மருத்துவத்துறை நெறியாளருக்கு அதிகாரம் வழங்கியுள்ளது. இதற்குத் தேவையான ஒப்பளிப்பு வழங்குவதற்கு நியமனப் படிவங்கள் முதலியவற்றை அனுப்பிவைக்குமாறு இராணுவத்தில் பணி புரிந்து வரும் சம்பந்தப்பட்ட மருத்துவர்களை போர் முனை இராணுவ-மருத்துவப் பணித் துறைத் தலைவர் மூலமாகத் தமிழ்நாடு மருத்துவத் துறை நெறியாளர் கேட்டுள்ளார். சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளிடமிருந்து நியமனப் படிவங்கள் முதலியன கிடைத்தவுடன் இப் படியை வழங்குவதற்கு நெறியாளர் தேவையான ஏற்பாடுகளைச் செய்வார்.

Adulteration of oil

* 570 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Ministre for Public Health be pleased to state—

(*a*) whether the Government have received any report of cases of adulteration of groundnut oil using rubber nuts; and

(*b*) if so, the action taken thereon?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. சா. கணேசன் : ரப்பர் கொட்டைகளை பயன்படுத்தி கடலை எண்ணெயில் கலப்படம் செய்யப்படுவதாக பரவலாக எங்கும் சொல்லப்படுகிறது. அமைச்சர் அவர்கள் தெரிவிக்கும்போது இப்படிப்பட்ட முறையீடு அரசாங்கத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை என்று சொன்னார்கள். இப்படி பரவலாக சொல்லப்படுகிற நிலைமையையாவது விசாரித்து ரப்பர் கொட்டைகளைக் கலப்பதால் குடலுக்கும், வயிற்றுக்கும் பெரும் தீமையை விளைவிக்கக்கூடும் என்பதை உணர்ந்து தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள முன்வருவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அரசாங்கத்திற்கு வந்த தகவலிலிருந்து சாம்பிள்களை எடுத்து அனலைஸ் செய்து பார்த்ததில் கடலை எண்ணெய்யோடு எள் எண்ணெய் கலந்திருப்பதாகத் தெரிந்தது. எள்ளோடு கடலை கலந்ததோ அல்லது கடலையோடு எள் கலந்ததோ எப்படியோ இரண்டும் கலந்ததான அனலிட்டிக்கல் ரிப்போர்ட்தான் வந்திருக்கிறது. ரப்பர் கொட்டை பற்றி வரவில்லை. அது பற்றி டைரக்டர் ஆஃப் பப்ளிக் ஹெல்த் மறுபடியும் இன்னும் கொஞ்சம் சாம்பிள்களை அனலைஸ் செய்து அதில் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கும்போது தகவல் சொல்லலாம்.